**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 20/2019**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | கௌதம்(PW1) | | |
| Father's Name | ரங்கசாமி | தொழில் | |
| Village | சுண்டக்காபாளையம் | | |
| Taluk | அவிநாசி | Age | **31** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன ஷானவி நான் சம்பவ சமயத்தில் வேலை செய்து வந்த சென்னை மொபைல்ஸ் கடையின் மேலாளர் ஆவார். கடந்த 02.06.2018 தேதி இரவு 9:30 மணி அளவில் நானும் சான்வித்தும் சாப்பிட்டு விட்டு பஜாஜ் பிளாட்டினா இருசக்கர வாகனத்தை சான்வித் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து கிழக்கிலிருந்து மேற்காக கோவை- அவிநாசி சாலையில் சென்னை மொபைல்ஸ் கடைக்கு எதிரே சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு பின்னால் வந்த அரசு பேருந்து வேகமாக வந்து எங்கள் வண்டியின் பின்னால் மோதியதில் நாங்கள் இரண்டு பேரும் தூக்கி வீசப்பட்டோம். சான்வித்கு தலையின் வலது பின் புறம் பலத்த அடிபட்டது. எனக்கு தலையில் இடது பின்புறம் முதுகு மற்றும் கைகளில் பலத்த அடிபட்டது. சென்னை மொபைல்ஸ் கடையில் வேலை செய்த ஜஸ்டின் மற்றும் அருகில் இருந்தவர்கள் உதவிக்கு வந்தார்கள். பின்பு எங்கள் இருவரையும் ஆம்புலன்ஸ் மூலம் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். இரவு 9.50 மணி அளவில் சான்வித் இரண்டு விட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். என்னை முதலுதவி சிகிச்சை முடித்து திருப்பூர் அரசு மருத்துவமனையில் அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருந்த போது போலீசார் வந்து என்னை விசாரித்து நடந்த விபரத்தை எழுதிக் கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து நடந்த அன்று விபத்தை ஏற்படுத்திய

அரசு பேருந்து ஓட்டுனர் மயில்சாமி என்பவரை நான் பார்த்தேன். அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அந்த நபர் ஆஜர் எதிரி தான்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நாங்கள் இருவரும் தலைக்கவசம் அணியாமல் சென்று இருந்தோம் என்றால் இல்லை, அணிந்திருந்தோம். தலைக்கவசம் அணிந்திருந்த விபரத்தை போலீசாரிடம் சொன்னேன். நாங்கள் சென்ற திசையை நோக்கிதான் நாங்கள் சென்று கொண்டு இருந்தோம் என்றால் சரிதான். நாங்கள் முன்னதாக சென்று கொண்டிருந்த நிலையில் எங்கள் பின்னால் நடப்பதை பார்க்க முடியாது என்றால் சரிதான். வாகனத்தின் எந்த பகுதி எங்கள் வாகனத்தின் மீது மோதியது என்று எனக்கு தெரியாது என்றால் அரசு பேருந்தின் இடதுபுற பகுதி மோதியது. மேற்சொன்ன விபரத்தை போலீஸ் விசாரணையிலும் புகாரிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலீசார் உடனே வந்து விட்டார்கள். விபத்து நடந்த விபரத்தை நான் மருத்துவமனையில் வைத்து சொன்னேன் சம்பவ இடத்தில் வைத்தும் சொன்னேன். இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற நபர் சரியாக ஓட்டாததால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி தான் அரசு பேருந்து ஓட்டினார் என்று நான் போலீசாரிடம் அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ள தேதி மற்றும் நேரம் தவறானது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.வாகன இழப்பீடு தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்து இழப்பீடு பெற்றுக் கொண்டோம்.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |